**2026 பிப்ரவரி மாதம் 24– ஆம் தேதி செவ்வாய்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**O.S. நெம்பர் : 108/2020**

O.S. No.: 108/2020 – வேல்ராஜ் PW2 24.02.2026

த/பெ.அழகர்சாமி

**சாட்சி அழைக்கப்பட்டு 2, 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. வாதி அழகர்சாமியை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 15 ஆண்டுகளாக தெரியும். வாதி எனக்கு நெருக்கமானவர் என்றால் டீக்கடையில் பார்த்தால் பேசுவோம். இவ்வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பண வரவு செலவிற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதியும், 1ம் பிரதிவாதியும் ஏற்படுத்திக்கொண்ட ஆவணம் பதிவு செய்யும்போது நான் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். அந்த ஆவணம் எதற்காக போடப்பட்டது என்றால் கிரைய ஒப்பந்தத்திற்காக பேசி ரூ.40 லட்சத்திற்காக போடப்பட்டதாகும். கடனிற்காக எழுதப்பட்ட ஒப்பந்தம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி நீரஜ் என்பவர் வாதியிடம் ரூ.15 லட்சம் பெற்ற கடனிற்காக எழுதப்பட்ட ஒப்பந்தம் என்றால் சரியல்ல, ரூ.40 லட்சம் கிரையம் பேசி ரூ.25 லட்சம் முன்தொகையாக கொடுத்தார்.

2. முன்தொகை ரூ.25 லட்சம் வாதி கொடுத்ததை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல, பையில் வைத்து பணம் கொடுத்ததை நான் பார்த்தேன். பையில் இருந்த எவ்வளவு தொகை என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பணத்தை பெற்றுக்கொண்டதாகவும், சாட்சி கையொப்பம் இடும்படியும் என்னிடம் கூறினார் என்றால் சரியல்ல. வாதிக்கு ரூ.25 லட்சம் பணம் கொடுப்பதற்கு வசதி இருப்பதை காண்பிக்க நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு

தெரியாது. வாதி அதிக வட்டிக்கு பிரதிவாதிக்கு கடன் கொடுத்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியும், வாதியும் மீண்டும் ஒரு ஒப்பந்தம் எழுதிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி பெற்ற கடனில் ரூ.7 லட்சத்தை வாதியிடம் 03.02.2020ம் தேதி கொடுத்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. மீதமுள்ள தொகையை சம்மத உடன்படிக்கைப்படி 12.02.2020ம் தேதி வாதியிடம் 1ம் பிரதிவாதி பணத்தைக் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியிடமிருந்து முழு தொகையையும் பெற்றுக்கொண்டு, 1ம் பிரதிவாதி இறந்தபின்பு அவரது மனைவி மற்றும் இளவர் பிள்ளைகளிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி எனக்கு நெருங்கிய நண்பர் என்பதால் அவருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்த ஆவணத்தை எழுதும்போது நடக்காத விசயங்களை நடந்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நிரூபணவாக்குமூலத்தில் பொய்யான சங்கதிகளை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 24.02.2026 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.24 17:16:39 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
24.02.2026.